2013 மே 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 473, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

473—

சமுதாயக் கல்லூரி

***3173—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பர்கிட் நகரில் சமுதாயக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "நாங்குநேரி தொகுதி, பாளையங்கோட்டை ஒன்றியம், பர்கிட் நகரில் சமுதாயக் கல்லூரி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?" என்ற கேள்வியைக் கேட்டுள்ளார். திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின்கீழ், 21 சமுதாயக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன; இவற்றில் 17 பாடப் பிரிவுகளில் 643 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் வாயிலாக தமிழ்நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் 204 சமுதாயக் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. அப்பகுதியிலுள்ள மாணவ, மாணவிகள், அந்த சமுதாயக் கல்லூரிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர்த்து, மேலும் ஒரு சமுதாயக் கல்லூரி தொடங்க தேவையிருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்பகுதியிலுள்ள தொண்டு நிறுவனத்தின் மூலமாக, தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கோ அல்லது மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கோ கருத்துரு, அதாவது proposal அனுப்பினால், அதைப் பரிசீலித்து சமுதாயக் கல்லூரி தொடங்க

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நாங்குநேரி தொகுதியில் தமிழக அரசின் சார்பில் எந்தக் கல்லூரியும் இல்லை. கேட்காமலேயே வாரி வழங்கும் அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, அரசு சார்பில் ஏதேனும் ஒரு கல்லூரியைத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோது, "சமுதாயக் கல்லூரி அமைக்க வேண்டும்" என்று கேட்டிருக்கிறார். ஆனால், தற்போது, "அரசுக் கல்லூரி அமைக்க வேண்டும்" என்று கேட்கிறார். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கும், சமுதாயக் கல்லூரிக்கும் வித்தியாசம் இருக்கிறது. அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைப் பொறுத்தவரையில், +2 தேர்ச்சி பெற்ற பின்பு, அங்கே விண்ணப்பித்து, சேர்ந்து படிக்கிற மேற்படிப்பாகும். சமுதாயக் கல்லூரி என்பது, அங்கே இருக்கக்கூடிய இளைஞர்கள், வேலைவாய்ப்பில்லாமல் இருக்கக்கூடியவர்கள், 8 ஆம் வகுப்பு, 9 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு படித்தவர்கள், அந்தப் பகுதியில் என்ன தொழில் இருக்கிறதோ, அந்தத் தொழிலைச் செய்வதற்கான ஒரு பயிற்சியை பெற்று, அங்கே வேலைவாய்ப்பைப் பெறுகிற வகையில் தொடங்கப்படுகிறது. ஆகவே, அந்த வகையில், அவருடைய தொகுதியில் சமுதாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று விரும்பினால், நிச்சயமாக மாண்புமிகு முதல்வர் அம்மா

2013 மே 13]

அவர்களுடைய அரசு கனிந்து பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு, என்னுடைய சமத்துவக் கட்சியின் தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 474, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

474—

வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***61—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கென தனியாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தை புதிதாகத் தொடங்க, அதன் விவகார எல்லையில் குறைந்தபட்சம் 2,000 ஹெக்டேர் சாகுபடி நிலப்பரப்பு இருக்க வேண்டுமென கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, அரசாணை எண் 376-ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிபந்தனை பூர்த்தியாகாத நிலையில், கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, கெம்மாரம்பாளையம் ஊராட்சிக்கு என புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்